தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-11-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக் கழகத்தில் மண் மற்றும் பயிர்களில் பல்லூட்ட மேலாண்மை குறித்த பயிற்சியின் நிறைவு விழா

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு மண்ணிலும், பயிர்களிலும் பல்லூட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சிறந்த வேளாண் செயல்பாடுகள் என்ற தலைப்பில் அகில இந்திய அளவிலான பயிற்சியின் நிறைவு விழா 28.11.2016 அன்று நடைபெற்றது. இமாசலப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், மிசோரம், கேரளா, அந்தமான் நிக்கோபார், கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய ஒன்பது மாநிலங்களிலிருந்து 20 வேளாண் விரிவாக்க அலுவலர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இந்திய அரசின் வேளாண் அமைச்சகம் சார்பில் நடத்தப்படும் இப்பயிற்சியின் நிறைவு விழாவில் முனைவர் கோ.அருள்மொழிச்செல்வன், பேராசிரியர் மற்றும் தலைவர் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார். முனைவர்.ப.மலர்விழி, பேராசிரியர் மற்றும் துணைப்பதிவாளர், பயிற்சி யின் நிகழ்வுகள் குறித்து விளக்கினார்.

மண் மற்றும் பயிர்களில் பல்வேறு ஊட்டச்சத்துக்களின் பற்றாக்குறை அதிகரித்து வரும் சூழலில் வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயப் பெருமக்களுக்கு எடுத்துச் செல்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். பயிற்சியின் போது விதை உரக்கட்டு தொழில்நுட்பம், நுண்ணூட்டக் கலவை தயாரிப்பு, திரவ உரங்கள் தயாரிப்பு, நுண்ணுயிர் உரங்கள் தயாரிப்பு மற்றும் இதர தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தனி அலுவலர் (இயற்கை வள மேலாண்மை இயக்குனரகம்) முனைவர். கி. குமார், தன் வாழ்த்துரையில் மண்ணில் அங்ககக் கரிமத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். மேலும், அவர் பயிர்க் கழிவுகளை உரமாக மாற்றிப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முனைவர். சி.ஜெயந்தி, இயக்குநர் (பயிர் மேலாண்மை) தன் உரையில் வளங்குன்றா வேளாண்மைக்கு மண் வளத்தின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார். மேலும், அவர் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், சமச்சீர் உர நிர்வாகம், பயறு வகைப் பயிர்களைப் பயிரிடுதல், பசுந்தழை உரங்கள் இடுதல், ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விளக்கினார்.

பயிற்சியில் பங்கேற்றவர்கள், தங்களது உரையில் இந்தப் பயிற்சியின் மூலம் பல்வேறு நல்ல தொழில் நுட்பங்களை கற்றுக் கொண்டதாகவும், பயிற்சியில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு.ராமசாமி, பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கி, விழா பேருரையாற்றினார். அவர் தமது உரையில் நமது முன்னோர்கள் பயன்படுத்திய வேளாண் தொழில் நுட்பங்களை தற்போதைய தொழில் நுட்பங்களுடன் ஒப்பிட்டுப் பேசினார். மண்வளத்தை எவ்வாறு மதிப்பீடு செய்வது, மண்வளத்தை பாதுகாக்க தேவையான தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார். இலைவழிப் பரிசோதனை செய்து தேவையின் அடிப்படையில் உரமிடுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், இப்பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கற்றுக்கொண்ட தொழில் நுட்பங்கள் விவசாயப் பெருமக்களை சென்றடைவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முன்னதாக முனைவர் கோ. அருள்மொழிச்செல்வன், பேராசிரியர் மற்றும் தலைவர் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை வாழ்த்துரையும், முனைவர். தி. சித்தேஸ்வரி, பேராசிரியர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை நன்றியுரையும் வழங்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்